திருக்குறளும் பரிமேலழகரும்

TNSDA
04829

புலவர் குழந்தை

திருக்குறளும் பரிமேலழகரும்



புலவர் குழந்தை

இளங்கோ புத்தகசாலை
புத்தகவியாபாரிகள்..ஈரோடு

முதற் பதிப்பு: 1952
இரண்டாம் பதிப்பு: 1964

உரிமை ஆசிரியர்க்கே

894.811
குழந்
4829
5 JUN 1975

புலவர் குழந்தையின் பிறநூல்கள்

1. இராவண காவியம்
2. திருக்குறள் குழந்தையுரை
3. திருக்குறளும் பரிமேலழகரும்
4. தொல்காப்பியர்காலத் தமிழர்
5. யாப்பதிகாரம்
6. இன்னூல்
7. நெருஞ்சிப்பழம் (செய்யுள்)
8. நீதிக்களஞ்சியம் உரை
9. திருநணைச்சிலேடைவெண்பா
10. தமிழ்வாழ்க (நாடகம்)
11. தமிழெழுத்துச் சீர்திருத்தம்
12. கொங்குநாடும் தமிழும்
13. கொங்குக் குலமணிகள்
14. தீரன் சின்னமலை
15. அருந்தமிழ் விருந்து
16. அருந்தமிழ் அமிழ்து
17. பூவாமுல்லை
18. உலகப் பெரியோன் கென்னடி
19. அரசியலரங்கம்

விலை ரூ. 2-50

ராஜன் எலக்டிரிக் பிரஸ், சென்னை-1.

முன்னுரை

எனது குறளுரை வெளிவந்து மூன்றாண்டுகளாகின்றன. ஆனால், இன்னும் சில தமிழ் இளைஞர்கள் 'திருக்குறளுக்கு எளிய உரை வேண்டும். உண்மை யுரைவேண்டும்' என்று அடிக்கடி செய்தித்தாள்களில் எழுதிவருகின்றனர். இது எதைக் காட்டுகிறது? இன்னும் தமிழ் மக்கள் எனது உரையைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதையன்றே காட்டுகிறது? புரிந்து கொண்டிருந்தால் அவ்வாறு எதற்காக எழுதுகின்றனர்? தமிழ்மக்கள் அவ்வாறு புரிந்து கொள்ளாமைக்குக் காரணம், பரிமேலழகர் உரை முழுவதையும் கருத்துடன் படித்து, அவர் வலிந்து புகுத்தியுள்ள மாறுபட்ட அயற் கருத்துக்களைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமையேயாகும்.

தமிழ்மக்களின் இக்குறைபாட்டை நீக்கவே, 'திருக்குறளும் பரிமேலழகரும்' என்னும் இந் நூலை எழுதலானேன். இதைப் படித்தாவது தமிழ் மக்கள் உண்மை யுணர்வார்களாக.

பவானி
6-5-52

புலவர் குழந்தை

இரண்டாம் பதிப்பு

ஆனால், இந்நூல் வெளிவந்த பின் அக்குறைபாடு நீங்கிவிட்டதென்பது, திருக்குறள் குழந்தையுரை—ஐந்தாம் பதிப்பு வெளிவர இருப்பதே தக்க சான்றாகும்.

பவானி
25—2—64

அன்புள்ள,
குழந்தை

பொருளடக்கம்

1. திருக்குறள்

1. குறளார்வம் ... 1
2. தமிழர் வீழ்ச்சி ... 3
3. தமிழர் எழுச்சி ... 6
4. குறளின் பெருமை ... 7
5. குறள் வாழ்வு ... 8

2. பரிமேலழகர் உரை

1. உரையாசிரியர் ... 11
2. பரிமேலழகர் ... 12
3. திருவள்ளுவமாலை ... 15

3. ஐயமகற்றல்

1. வள்ளுவர் காலநிலை ... 20
2. வடபுலத்தார் ... 21
3. நூல்செய்த முறை ... 27
4. நூன் மரபு ... 28
5. சொற்பொருள் விளக்கம் ... 30

4. உரைப்பாயிர விளக்கம்

1. பாயிரம் ... 33
2. உரைப்பாயிரம் ... 34

5. ஆரியக் கொள்கை

1. வருணச்சிரம தருமம் ... 63
2. சாதி வேற்றுமை ... 73

3. வேள்வி ... 77
4. துறக்கம், நரகம் ... 82
5. புராணக் கதை ... 85
6. பெண்ணடிமை ... 92
7. பச்சை யாரியம் ... 97

6. சமயக் கருத்து

1. வினை ... 104
2. பிறப்பு ... 108
3. வீடு ... 122
4. ஆராய்ச்சி ... 127
5. கடவுள் ... 137
6. ஊழ் ... 139

7. மாறுபட்ட உரை ... 144

குறள் அகரவரிசை

அடக்கமம 83
அந்தணரென் 154
அருளில்லார் 125
அருட்செல் 76
அவிசொரிந் 49
அளவின்கண் 116
அறத்தாறிது 105
அறம்பொருளின் 97
அறனிழுக் 79
ஆபயன் 155
ஆராவியற் 126
ஆற்றினி 156
இகலின் 158
இயற்றலும் 80
இரத்தலி 48
இரந்துமு 48, 107,
இருந்தோம் 70
இருமைவ 122
இருள்சேர் 104
இலனென் 113
இல்வாழ்வா 64
இணைத்துணைத் 78
ஈன்றபொ 94
உரனென்னு 123
உற்றநோய் 153
ஊருெரால் 86

எப்பொருள் 51
எழுபிறப்பு 109
எழுமையெ 110
எள்ளாமை 148
ஏந்தியகொ 90
ஐந்தவித் 86
ஒருமைக்கண் 119
ஒருமைச் 120
ஒருமையுள் 111
ஒழுக்கத்து 63
ஒழுக்க 55
ஒழுக்க கு 70
ஓர்ந்துகண் 51
கருவியும் 159
கேடறியா 157
கொல்லான் 117
சிறப்பீனும் 144
சிறப்பொடு 161
சுழன்றுமேர் 48
செவியுண 153
தம்பொருள் 80
தவஞ்செய் 115
தவமுந்த 146
தனக்குவ 109
தாளாற்றித் 144
தீயவைதீ 112
தீவிஞையார் 105
துறந்தார்க் 65
தூஉய்மை 125
தென்புலத் 67
நல்லாறெ 126
நன்றுகுமா 50, 149
நாடாது 122
நிலவரை 145
நிலையஞ்சி 148
பற்றுகப 150
பாத்தூண் 113
பிறப்பென் 118
பிறப்பொக் 46, 74
புத்தேளுல 84
பெறுமவற் 93
பெற்றூர்ப் 92
பொய்யாமை49
பொருளாஞ 49, 159
பொருளல் 151
பொருள்நீங் 114
மடியிலா 87
மறப்பினும் 72
முறைசெய் 156
மேற்பிறந் 47,73
வகுத்தான் 106
வன்கண் 160
வேண்டிய 147

திருக்குறளும் பரிமேலழகரும்

1. திருக்குறள்

1. குறளார்வம்

இன்று எங்கு பார்த்தாலும் திருக்குறள் திருக்குறள் என்னும் ஒலியே கேட்கப்படுகிறது. தென்றற் காற்றுத் தமிழ் மணங் கமழ வீசுகின்றது என்னும் தமிழ் நூல்கள். இன்று தென்றலே யன்றி, வாடை, கொண்டல், கோடை என்னும் எல்லாக் காற்றும் குறள் மணங் கமழ வீசுகின்றன எனல் பொருள் பொதிந்த பொன்னுரையே யாகும். அவ் வூரில் திருவள்ளுவர் திருநாள், இவ்வூரில் திருக்குறள் மாநாடு, உவ்வூரில் திருக்குறள் மன்ற ஆண்டுவிழா என்னும் செய்தியே இன்று செய்தித்தாள்களில் வெளிவரும் செய்திகளில் சிறந்த செய்தியாகி விட்டது. திருக்குறளைப் பற்றிய செய்தி யில்லாச் செய்தித்தாள்களே இன்று கிடையா. எந்த ஓர் இன்றியமையாத செய்தியையும் இருட்டடிப்புச் செய்யும் இதழ்களும் குறள் பற்றிய செய்தியை மட்டும் ஒருவாறு வெளியிட்டே வருகின்றன. குறள் இன்று அவ்வளவு முதன்மை பெற்றுவிட்டது.